

“என் ஜெனீவா ஆதரவு பணியாளர்கள் இல்லாமல், என் குணமடைதல் இவ்வளவு எளிதாக இருந்திருக்காது.”

காட்ரியோனா,
ஜெனீவா வாடிக்கையாளர்

## எங்கள் முழுமையாக நிதியுதவி செய்யப்பட்ட சேவைகளுக்கான பரிந்துரையைப் பெறுவது எப்படி

உங்கள் வீட்டில் ஆதரவு சேவைகளை யார் வழங்க வேண்டும் என்பதை நீங்களே தேர்ந்தெடுக்கலாம்.

உங்கள் குடும்ப மருத்துவர், சுகாதார நிபுணர், தேவைகள் மதிப்பீட்டு ஒருங்கிணைப்பாளர், சேவை இணைப்பாளர் அல்லது ACC ஒருங்கிணைப்பாளருடன் உங்கள் தேவைகளைப் பற்றி பேசும் போது, ஜெனீவா ஹெல்த்கேருக்கான பரிந்துரையை கேளுங்கள்.

எங்களிடம் எங்கள் குழுவை பற்றி கேட்டறியவும்

**My Homecare**
by Geneva Healthcare

Geneva Healthcare


0800 GENEVA / 0800 436 382
info@genevahealth.com
www.genevahealth.com


Geneva Healthcare




# முழுமையாக நிதியுதவி செய்யப்பட்ட வீட்டுப் பராமரிப்பு மற்றும் மூத்தோர் கவனிப்பு

வீடு பராமரிப்பு மற்றும் சமூக ஆதரவு


0800 GENEVA / 0800 436 382
info@genevahealth.com
www.genevahealth.com

## ஒவ்வொருவருக்கும் முழுமையாக வாழ்க்கையை வாழும் வாய்ப்பு கிடைக்க வேண்டும்

நாங்கள் நியூசிலாந்தில் மூத்த குடிமக்களை, நோய், காயம் பட்டவர்களை மற்றும் மாற்றுத்திறனாளிகளை கவனித்து கொள்வதிலும் ஆதரவு தருவதிலும் நம்பகமான நிபுணர்கள். 1996 முதல், மக்களை ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும் சமூகத்துடன் இணைந்து மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ உதவி செய்து வருகிறோம்.

நாங்கள் சுகாதார அமைச்சகம் , மாவட்ட சுகாதார வாரியங்கள், சமூக மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் ACC யால் தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சேவை வழங்குநர் வலையமைப்பின் ஒரு பகுதியாக இருக்கிறோம்.

எங்கள் தகுதிவாய்ந்த, பாதுகாப்பு சரிபார்க்கப்பட்ட, ஜெனீவா சான்றளிக்கப்பட்ட தொழிலாளர், செவிலியர்கள் மற்றும் பல சுகாதார நிபுணர்களுடன் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு 24/7 எங்கள் முழுமையான ஆதரவினை வழங்குகிறோம்.

எங்கள் மருத்துவ ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆதரவு திட்டங்கள் உங்கள் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப தனிமயமாக்க பட்டவை.





## சமூக செவிலியர் சேவைகள்

உங்கள் வீட்டின் சுகாதாரமான சூழலில் விரைவாகவும் எளிதாகவும் குணமடையுங்கள், அல்லது ஆரோக்கியமாக இருக்க உங்களுக்கு தேவையான ஆதரவினைப் பெறுங்கள். நாங்கள் உங்களுடனும் உங்கள் முதன்மை மருத்துவ அணியுடனும் இணைந்து உங்களுக்கு ஏற்ற தனிப்பட்ட ஆதரவு திட்டத்தையும் பின் தொடரும் திட்டத்தையும் வழங்குவோம்.

எங்களால் கீழ்க்கண்ட சேவைகளில் உங்களுக்கு உதவ முடியும்:

- காய பராமரிப்பு: எளிமையான, திடீர், நீண்டகால மற்றும் சிக்கலான மருத்துவ பராமரிப்பு
- சமூக செவிலியர்களின் ஆய்வு
- உயர் தேவையுடையவர் சேவை மேலாண்மை
- மருந்து மேலாண்மை
- சுகாதாரத்தில் கல்வி மற்றும் தடுப்பு நடவடிக்கை மேலாண்மை
- அறுவை சிகிச்சைக்குப் பிறகு குணமடைதலுக்கு உதவி, வீட்டுத் பணிகளில் உதவி உட்பட
- ஓய்வு கால பராமரிப்பு சேவைகள் (Respite Services)
- சிறுநீர்க் குழாய் பராமரிப்பு (Catheter Care)
- இறுதி கால பராமரிப்பு (Palliative Care)

உங்கள் மருத்துவ காப்பீட்டு வழங்குநரிடம் தகுதி பற்றி கேட்டறியவும்.

## வீட்டு மற்றும் சமூக ஆதரவு சேவைகள்

உங்களுக்காக சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெனீவா சான்றளிக்கப்பட்ட ஆதரவு பணியாளர்கள் மற்றும் செவிலியர்களின் தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் ஆதரவுடன், உங்கள் வீட்டில் சுதந்திரமாகவும் நன்றாகவும் வாழ்ந்து மகிழுங்கள்.

நாங்கள் உங்களுக்கு பின்வரும் சேவைகளில் உதவ முடியும்:

- தனிநபர் பராமரிப்பு, வீட்டு உதவி, மற்றும் தோழமை
- ஓய்வு கால பராமரிப்பு / பராமரிப்பாளர் ஆதரவு
- முதியவர் மற்றும் நினைவழிவு (டிமென்ஷியா) பராமரிப்பு
- இறுதி கால பராமரிப்பு (Palliative Care)
- மாற்றுத் திறனாளி ஆதரவு மற்றும் மறுவாழ்வு
- நீண்டகால உடல்நிலை குறைபடுகளுக்கான ஆதரவு
- அறுவை சிகிச்சை அல்லது விபத்துக்குப் பிறகு ஆதரவு சேவை.
- முதுகு மற்றும் மூளை காயம்பட்டவர்களுக்கான ஆதரவு.
- குழந்தைகளுக்கான ஆதரவு சேவை.
- மருத்துவ ரீதியாக அன்றாட கவனமும் ஆதரவும் தேவையுள்ள குழந்தைகளுக்கான சேவை.
- அரசாங்க நிதியுதவி சேவைகள் (ACC, Te Whatu Ora, Whaikaha)
- தனியார் நிதியுதவி சேவைகள்
- ஒன்றிணைந்த மருத்துவ ஆதரவு

